மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : I. U. D. P. திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம்/திருமண மண்டபம் கட்ட ''இராணிப்பேட்டை'' மற்றும் ''உடுமலைப்பேட்டை'' ஆகிய இரு நகராட்சிகளுக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தனியார் முதலீடு இது போன்ற திட்டங்களுக்கு அதிகம் இருக்கும் நிலையில் அரசு நிதியையும் இதில் செலவிடத் தேவையில்லை என்று கருதப்படுவதால் மற்ற நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் இவ்வாறான கடனுதவி வழங்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

மாணவர் விடுதி கட்டுத

*10055: திருமதி யசோதா செல்லப்பா :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வலங்கைமான் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியத்தில் மெலட்டூர் பேரூராட்சியில் மாணவர் விடுதி கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மெலட்டூர் பேரூராட்சியில் இயங்கிவரும் மாணவர் விடுதி சிறிய வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அங்கு சுமார் 80 மாணவர்கள் தங்கி, கல்வி பயில்கிறார்கள். அந்தக் கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது, முறையாக தண்ணீர் வசதி கூடக் கிடையாது. கடந்த ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி நான் அதைப் பார்வையிட்டபோது, மாணவர்கள் மிகவும் மோசமான நிலையில் இருந்தனர். எனவே அரசுக்குச் சொந்தமான மாணவர் விடுதி ஒன்று இந்த ஆண்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

10-00 மணி

1990 ஆகஸ்டு 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் கூறிய மெலட்டூரில் விடுதி கட்டுவதற்கு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. பொதுவாக அவசியத்தைக் கருத்தில் கொண்டு விடுதிகள் கட்ட இடம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. நிலம் தேர்வு செய்த பிறகு, பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டிடம் கட்டுவதற்குத் தாமதம் இருந்தாலும் பழுதான கட்டிடத்தை மாற்றி- வேறு ஒரு மாணவர் விடுதிக்கு மாற்றித்-தருவதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY